சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

அசல் வழக்கு எண். 309/2023

**PW1 ரவீந்திரன்** **19.02.2026**

**<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் என்ன படித்துள்ளேன் என கேட்டால் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிராதும், பிரமாண வாக்குமூலத்தையும் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். நானும், முருகானந்தமும், ஈஸ்வரமூர்த்தியும் நண்பர்கள் என்று சொன்னால் ஈஸ்வரமூர்த்தியும், நானும் தான் நண்பர்கள். முருகானந்தை பற்றி எனக்கு தெரியாது. நான் தற்போது என்ன வேலை பார்த்து வருகிறேன் என கேட்டால் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து பணிஓய்வு பெற்றுவிட்டேன் தற்போது எந்த வேலையும் செய்யவில்லை. நான், முருகானந்தம், மந்தராசல மூர்த்தி, ஈஸ்வரமூர்த்தி தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் பணிபுரிந்தோம் என்று சொன்னால் முருகானந்தத்தை பற்றி எனக்கு தெரியாது இதர நபர்கள் போக்குவரத்து கழகத்தில் பணிபுரிந்தவர்கள். பிரதிவாதி மந்தராசலமூர்த்தி என்னிடம் பணம் எப்போது கேட்டார் என்று கேட்டால் பணம் வாங்கிய தேதி 11.07.2022 க்கு முன்பு 2 மாதத்திற்கு முன்பு பணம் வேண்டும் என்று கேட்டார். பிரதிவாதியை எவ்வாறு தெரியும் என கேட்டால் ஒரே துறையில் பணிபுரிந்ததால் தெரியும். நான் ரூ.7 லட்சம் கொடுத்ததாக சொல்லும் நிலையில் எங்கு வைத்து எவ்வாறு கொடுத்தேன் என கேட்டால் எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். 500 ரூபாய் 14 கட்டுகள் கொடுத்தேன். மேற்கண்ட ரூ.7 லட்சத்தை

எங்கிருந்து எடுத்து கொடுத்தேன் என கேட்டால் வீட்டில் இருந்து எடுத்து கொடுத்தேன் நான் வருமான வரி கட்டி வருகிறேனா என்றால் கட்டி வருகிறேன் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை ஆனால் தாக்கல் செய்யமுடியும். ரூ.7 லட்சம் கொடுத்த நிலையில் வேறு ஏதேனும் ஆவணம் வாங்கினேனா என்றால் பிராம்சரி நோட்டை தவிர வேறு எந்த ஆவணத்தையும் வாங்கவில்லை, காசோலை வாங்கவில்லை. முருகானந்தம் என்பவரிடம் பிரதிவாதி ஏற்கனவே பணம் வாங்கி கட்டிவிட்டார் என்றும், ஆனால் அவரிடமிருந்து பிராம்சரி நோட்டை பெற்று எனது பெயரில் நிரப்பி பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் அசல் வீட்டு பத்திரம் என்னிடம் உள்ளது என்றால் சரியல்ல, போட்டோ நகல் தான் என்னிடம் உள்ளது. நான் சொன்ன தேதியில் பிரதிவாதி என்னிடம் எந்த தொகையும் பெறவில்லை என்றும்ட அதற்கு பிராம்சரி நோட் எழுதி கொடுக்கவில்லை என்றும் நான் பொய்யாக பிராம்சரி நோட் எழுதி நிரப்பி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நானும், முருகானந்தமும் சேர்ந்து தான் இந்த வழக்கு தாக்கல் செய்து நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. நான் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி

பொள்ளாச்சி